1970 ஆகஸ்ட் 25]

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் பகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்கும் இடத்தில் பேரணை கட்ட வேண்டும் என்று ஆங்கிலேயர் காலத்திலேயே ஆய்வு செய்யப்பட்டது. நம்முடைய அரசு அதை ஆய்வு செய்ய முயலுமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆங்கிலேயர் காலத்தைப்பற்றித் தெரியாது. வெள்ளாறு, நெரிஞ்சிக்குடி ஆறு இவற்றிற்கு மேல் ஒரு மைல் தூரத்தில் அணை கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆற்றில் நீரின் அளவு குறைவு. பாசனத்திற்கு பற்றுக்குறை ஏற்படும் என்பதால் அதை மேற்கொள்ள முடியவில்லை.

லட்சுமணம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக் கட்டடம்

* 24 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், லட்சுமணம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தீர்மானிக்கப் பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(உ) தற்போது எந்த நிலைமையில் இருந்து வருகிறது?

(எ) காலதாமதம் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம். தீர்மானிக்கப்பட்டது.

(இ) 25—11—1967.

(உ) தற்போது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

(எ) கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுசெய்த பின்பும் கட்டடம் கட்டும் இடம் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனையினுல் கட்டடம் கட்டும் வேலை தாமதிக்கப்பட்டது.

Greater Madurai Scheme

* 25 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Greater Madurai Scheme and the scheme regarding the inclusion of some areas of Madakulam Panchayat in the Madurai Municipality was deferred by the Government of Tamil Nadu; and

(*b*) if so, the reasons for the same?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம்.

(இ) நடைபெறவிருக்கின்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணி மற்றும் பேரவை வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, முந்திய அரசு விதித்துள்ள தடையின் காரணமாக இதுகுறித்த செயற்குறிப்புக்கள் ஒத்திப்போடப் பட்டுள்ளன.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to tell us whether this decision was taken by Government after getting the consent of the Municipal Council of Madurai or without getting the consent of the Municipal Council of Madurai?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மதுரை நகராட்சி மன்றம் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. 27—1—70 தேதியில் கூட, தீர்மானத்தின் மூலம், அரசின் முடிவுகளை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

அரியலூர் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவு கடன் வழங்கு சங்கம்.

***26 வினா—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கத்தில் நடைபெற்ற பைலா திருத்தம் பதிவாளரால் அனுமதிக்கப்பெற்றும் அதை அமல் நடத்தக்கூடாது என்று தமிழக அரசு தடை விதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, அரியலூரைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நாணயச் சங்கம் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக செயல்படாமல் இருக்கிறது. இதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? இனிமேலாவது அந்தச் சங்கம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கழகம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதைப்பற்றிய ஒரு வழக்கு ஹைகோர்ட்டில் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை.

***27 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தவிட்டு எண்ணெய் ஆலை அமைப்பதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம், எனில், எப்போது நிறுவப்படும்?